செய்தி வெளியீடு எண்: 422 நாள் : 05.08.2013

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் தலைவர்களுக்கு நிர்வாக நடைமுறை பயிற்சியைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை!

- **அகில இந்திய கூட்டுறவு வார விழாவில், தமிழகத்தில் உள்ள 180 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் வழங்கல் மற்றும் வசூலில் சிறந்த வங்கியாக திருப்பூர் வங்கிக்கு பரிசு**
- **தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளால் வழங்கப்பட்ட மொத்த கடன் அளவு இருபத்து நான்கு மாதங்களில் ரூ.180.96 கோடி அளவிற்கு உயர்வு.**
- **கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இணைய தளம் மூலம் பல்வேறு வகையான வசதிகளைப் பெறும் வகையில் 100 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பொதுச் சேவை மையங்கள் தொடங்கப்பட்டு சேவை புரி கின்றன.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (05.08.2013) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில், சென்னை சர்.பி.ட்டி. தியாகராய கலையரங்கில் தொடக்க கூட்டுறவு மேலாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் தலைவர்களுக்கு நிர்வாக நடைமுறைப் பயிற்சியினை தொடங்கிவைத்து உரையாற்றினார்.

அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், “மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்” கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் ஆணையத்தை அமைத்தபின்பு, 12 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் சிறப்பான முறையிலும், ஜனநாயக முறையிலும் நடைபெற்று வருகின்றது. இத்தேர்தலில் வெற்றி பெற்று பயிற்சிக்கு வந்திருக்கும் தலைவர்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக பஞ்சாபில் உள்ள ஜனங் எனுமிடத்தில் 1920இல் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி செயல்படத் தொடங்கியது.

தமிழ்நாட்டில் முதன் முதலாக காஞ்சிபுரம் கூட்டுறவு நில அடமான வங்கி 29.01.1925 அன்று முதல் செயல்படத் தொடங்கியது. தற்போது மாநில அளவில் நீண்டகாலக் கூட்டுறவு கடன் அமைப்பில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும், வருவாய் வட்டம் மற்றும் வட்டார அளவில் 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் கடன் வழங்கலிலும் மற்றும் கடன் வசூலிலும் சிறந்து விளங்கிய திருப்பூர் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது சிறந்த வங்கிக்கான பரிசினைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது கடந்த 46 ஆண்டு காலமாக வேளாண் மக்களுக்கும், வேளாண் ஆராய்ச்சியாளர்களுக்கும், நிலவளம் எனும் மாத இதழ் மூலமாக வேளாண்மை தொடர்பான தகவல்களை அளித்து வருகின்றது. இதில் வேளாண் அறிஞர்களின் அறிவுரைகளும், ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சி கட்டுரைகளும் மற்ற வேளாண் தொடர்பான செய்திகளையும் அளித்து வருகின்றது. இதன் சிறப்பான சேவையைப் பாராட்டி புதுதில்லியில் உள்ள இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு இதழாக தேர்ந்தெடுத்து கௌரவித்துள்ளது.

மகளிர் மீதும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதும் சமூக அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு சங்க நிர்வாகக் குழுக்களிலும் 30 சதவிகிதம் மகளிருக்கும், 18 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு வழங்கி, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் வழிவகை செய்துள்ளார்கள்.

**தமிழ்நாட்டைப் போன்று, கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழுவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கு 18% ஒதுக்கீடும், மகளிருக்கு 30% ஒதுக்கீடும் வேறெந்த மாநிலத்திலும் ஏற்படுத்தித் தரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.**

தற்போது தமிழ்நாட்டில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் வேளாண்மைக் கடன்கள் வழங்கப்படுவதோடு மட்டுமல்லாமல் நகைக் கடன்களும் 5 ஆண்டு காலமாக வழங்கி வருகின்றன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில்**
**தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் சாதனை**

- தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மொத்த வைப்பீடுகள் 31.3.2011 அன்று ரூ.46.27 கோடியாக இருந்தது. தற்போது 31.3.2013 அன்று ரூ.76.95 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது இருபத்து நான்கு மாதங்களில் ரூ.30.68 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.
- 2010–11ஆம் ஆண்டில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளால் வழங்கப்பட்ட மொத்த கடன் ரூ.692.71 கோடியாக இருந்தது. தற்போது இருபத்து நான்கு மாதங்களில் ரூ.873.67 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது, இருபத்து நான்கு மாதங்களில் ரூ.180.96 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் பொதுமக்களிடையே கூட்டுறவு நிறுவனங்கள் மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையையே காட்டுகிறது.
- 16 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டப்பட்டுள்ளது.
- கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு மின்னஞ்சல், ஒளிநகல் எடுத்தல், நிலவுடைமை ஆவணங்களின் நகல் வழங்குதல், இணைய தளம் மூலம் பயணச்சீட்டு பெறுதல் போன்ற பல்வேறு வகையான வசதிகளைப் பெறும் வகையில் 100 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பொதுச் சேவை மையங்கள் தொடங்கப்பட்டு சேவை புரிந்து வருகின்றன.
- அனைத்து தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கணினி மற்றும் தேவையான வன்பொருள்கள் (Hardware) நிறுவப்பட்டுள்ளன. அனைத்து தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிலும் பொதுவான மென்பொருளை பயன்படுத்த ஏதுவாக சைதாப்பேட்டை மற்றும் ஸ்ரீவைகுண்டம் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் முன்மாதிரியாக (Pilot Basis) கணினிமயமாக்கல் பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கித் தலைவர்களாகிய நீங்கள் வருங்காலத்தில் அனைத்து வங்கிகளும் பரிசுகளைப் பெறும் வகையில் உங்களின் பணிகள் அமைய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

''மக்களுக்காகத் திட்டங்கள் ; திட்டங்களுக்காக மக்கள் அல்ல என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் மட்டுமே ஏழை, எளிய மக்களுக்கு சிறப்பான சேவையாற்றிட இயலும் என நம்பிக்கை கொண்டு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தையும், விருப்பத்தையும் நன்கு அறிந்து பொதுமக்களுக்கும், உறுப்பினர்களுக்கும் சேவையாற்றிட வேண்டும் .

**வாழ்கின்ற காலங்களில் வரலாறு படைப்பது என்பது சாதாரண விஷயமல்ல.** அதை ஒரு குறிக்கோளாக எடுத்துக்கொண்டு அதற்கான **தீவிர முயற்சிகளை எடுத்து செயல்படுத்தினால் மட்டுமே** வரலாறு படைக்க முடியும்'' என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.கே.இராஜேந்திரன், திரு.இராம ஜெயம் பாண்டியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9